செய்தி வெளியீடு எண் : 026 நாள் : 04.01.2023

<u>செய்தி வெளியீடு</u>

# மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர் பெரியகருப்பன் அவர்கள் மற்றும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு. அர.சக்கரபாணி அவர்கள் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் நியாயவிலைக் கடைகளில் ஆய்வு

இன்று (04.01.2023) ஆழ்வார்பேட்டையில் உள்ள திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான நியாயவிலைக் கடைகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தைப்பொங்கல் பண்டிகை முன்னிட்டு பொங்கல் பரிசாக தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, முழு கரும்பு மற்றும் ரூ.1,000/- ரொக்கத்தினை அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் முகாம்களில் வசிக்கும் குடும்பதாரர்கள் அனைவருக்கும் வழங்குவதற்காக டோக்கன்கள் விநியோகம் செய்யும் பணி மற்றும் முன்னேற்பாடு பணிகளை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர் பெரியகருப்பன் அவர்கள் மற்றும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர.சக்கரபாணி அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான 3 நியாயவிலைக் கடைகளுக்கு ISO தரச் சான்றிதழினை வழங்கினார்கள்.

பின்பு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் செய்தியாளர்கள் சந்திப்பின்போது பேசியதாவது, தைப்பொங்கல் பண்டிகை முன்னிட்டு பொங்கல் பரிசாக தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, முழு கரும்பு மற்றும் ரூ.1,000/- ரொக்கத்தினை 2.19 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்காக தமிழகத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் டோக்கன் விநியோகிக்கும் பணி 03.01.2023 முதல் 08.01.2023 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 09.01.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் சென்னையில் தொடங்கி வைக்கப்பட உள்ளது. பொங்கல் பரிசு வழங்குவதற்கான அனைத்து பொருட்களும் தரமானதாக, சுகாதாரமாகவும் இருக்க வேண்டும் என்றும், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்குவதற்காக பணியாளர்கள் பணிபுரிய வேண்டும் என்றும், நியாயவிலைக் கடைகள் அனைத்தும் சுகாதாரமாகவும், அனைத்து வசதிகளும் செய்து தர வேண்டும் என்றும், குடும்ப அட்டைதாரர் அனைவருக்கும் பொங்கல் பரிசு தங்கு தடையின்றி வழங்கப்பட வேண்டும் என்றும் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழகத்தில் உள்ள 35,000 நியாயவிலைக் கடைகளுக்கு ISO தரச் சான்றிதழ் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது 4,455 நியாயவிலைக் கடைகளுக்கு ISO தரச் சான்றிதழ்

பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள நியாயவிலைக் கடைகளுக்கு ISO தரச் சான்றிதழ் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், கூட்டுறவுத்துறை மூலம் விவசாயிகளுக்கு கடந்த ஆண்டு ரூ.10,292 கோடி அளவிற்கும், இந்தாண்டு (டிசம்பர் 2022 வரை) ரூ.10,361 கோடி அளவிற்கும் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. மார்ச் 2023க்குள் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான ரூ.12,000 கோடிக்கு அதிகமாக பயிர்க்கடன் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

பின்பு மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பின்போது பேசியதாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்டத்தில் செயல்படும் நியாயவிலைக் கடைகளில் அரிசிக்கு பதிலாக ராகி வழங்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவித்துள்ளதனை தொடர்ந்து, தற்போது அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், விரைவில் தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளில் அரிசிக்கு பதிலாக ராகி வழங்கப்படும். மேலும், இந்த ஆண்டு சிறுதானிய ஆண்டு என்பதால், அதிக அளவில் சிறுதானியங்களை நியாயவிலைக் கடைகளில் விநியோகம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. த.வேலு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. அ.சண்முகசுந்தரம், இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in